**யடியன்தொட பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யடியன்தொட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் யடியன்தொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற் கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 3,005,000 பெறுமதியான நிலையான வைப்பு மீட்டப்படட தொகையினால் யடியன்தொட வாராந்த சந்தை மற்றும் நூகலத்தை நிர்மாணிக்க செலவிடப்பட்ட ரூபா 1,891,600 தொகையை மூலதன கணக்கூடாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக திரண்ட நிதயம் மற்றும் பற்றாக்குறை கணக்கிற்கு வரவு வைத்ததால் ஆண்டின் பற்றாக்குறை அவ் அளவால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் நிலையான வைப்பை மீட்டும் போது இவ்வாறான குறைகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மூதலதன செலவுகள் மூலதன கணக்கூடாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | ஆண்டில் உற்பத்தி செய்த பசளை அளவின் உற்பத்தி கிரயத்தை கணக்கிட்டு கணக்கீடு செய்வதற்கு பதிலாக ஆண்டில் விற்கப்பட்ட அளவின் விற்பனை பெறுமதியான ரூபா 343,471 ஆண்டின் உற்பத்தி தொகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | உற்பத்தி கிரயத்தை சரியாக இனங்கண்டு கணக்கிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது | உற்பத்தி கிரயத்தை கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| ஒரு கணக்கு விடயம் தொடர்பாக நிதிக்கூற்று பிரகார பெறுமதி ரூபா 11,436,630 மற்றும் அட்டவணை பிரகார பெறுமதி ரூபா 10,764,222 ஆனதில் ரூபா 672,408 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | பல வருடங்கலாக பதிவேட்டுக் கட்டுப்பாட்டில் இருந்த தெளிவின்மை காரணமாக இவ் இணக்கமின்மைகள் ஏற்பட்டுள்ளதாகவும் நிதிக்கூற்று பெறுமதி மற்றும் ஊழியர் கடன் உள்ளவாரான மீதியை சமப்படுத்த 2021 ஆண்டில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வித்தியாசத்திற்கான காரணத்தை பரிசோதித்து சரிசெய்து கொள்ள வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 835,984 ஆன கணக்கு விடயமொன்று தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படவில்லை. | உரிய ஒப்பாய்வொன்றை மேற்கொண்டு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் தொடர்பாக உறுதியாகும் எழுத்து மூல சான்றுகளை சமர்பிக்க வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371(1) | 2014 நவம்பர் 28 திகதி கிராம அபிவிருத்தி சங்கமொன்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 137,710 ஆன முற்பணம் மீளாய்ழவாண்டு இறுதி வரை தீர்க்கப்பட்டு இருக்கவில்லை. | மாகாண சபையிடம் அல்லது உள்ளூராட்சி திணைகளத்திடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டிய இம் மீதியை அந்நிறுவனங்களினால் வழங்கியுள்ள வழிகாட்டலின் பிரகாரம் 2021 ஆண்டினுள் தீர்த்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2017 திசெம்பர் 13 ஆம் திகதிய 28 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் சுற்றறிக்கை (1) பிரிவு சபரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் 2005/04 ஆம் சுற்றறிக்கை | காணிப் பகுதி அபிவிருத்தி மற்றும் உப பிரிப்பின் போது 01 ஹெக்டயரிலும் கூடிய காணிகளிலிருந்து சமூக களியாட்ட நடவடிக்கைகளுக்கு 10 சதவீத காணியை சபைக்கு சுவீகரிக்க வேண்டிய போதும் குரஹன்ஹேன கல்பாத காணி மற்றும் பட்டலஓவிடவத்த காணி உப பிரிப்பின் போது அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கல்பாத பிரிவு நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழான பிரதேசமாக பெயரிடப்படாததால் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், கண்டறிந்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,887,625 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 10,175,128 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட நிலுவை வீதவரி ரூபா 655,055 அறவிடப்படவில்லை. | 2021 ஆண்டினுள் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | | |
| | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண நிலுவை மீதி ரூபா 4,979,401 அறவிடப்படவில்லை. | இத் தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஏனைய வருமானம் | | |
| | கள பரிசோதனையின் போது இனங்கண்ட 75 விளம்பரங்களிற்காக ரூபா 186,250 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சீரற்ற சமூக சுகாதார நிலைமை காரணமாக வருமான அறவீடு குறைந்துள்ளதுடன் ரூபா 186,250 தொகையிலிருந்து ரூபா 56,950 அறவிடக் கூடாத தொகையொன்றை இனங்கண்டுள்ளதுடன் | அறவிட வேண்டிய வருமானத்தை பின்னர் திருத்துகையில் சரியான உறுதிப்படுத்தலுடன் அதனை செய்ய |

| | | |
|---|---|---|
| | எதிர்வரும் ஆண்டு கணிப்பீட்டின் போது எஞ்சிய தொகை தொடர்பான அறவீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டியதுடன் அறவிட வேண்டிய நிலுவையை தாமதமின்றி அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1978 இன் 41 இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 21 பிரிவு பிரகாரம் அங்கீகரித்த திட்டத்தின் மீது நிர்மாணிக்கப்படும் கட்டிடங்களிற்கு இணக்கப்பாட்டு சான்றிதழ் வழங்க வேண்டிய போதும் 03 ஆண்டு காலத்தினுள் கட்டிட நிர்மாணத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட 120 விண்ணப்பங்களில் 108 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்ட போதும் நிர்மாணப் பணிகள் பூர்த்தியான பின்னர் இணக்கப்பாட்டு சான்றிதழ் கோராமை மற்றும் கள பரிசோதனையின் மூலம் அந் நிர்மாணங்களை இனங்காணாததால் 15 சான்றிதல்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன. | கட்டிட திட்டம் அங்கீகரிக்கப்பட்ட போதும் உரிய காலத்தில் நிர்மாணம் பூர்த்தி செய்யாததால் இணக்கப்பாட்டு சான்றிதழ் வழங்குவதில் தாமதம் காணப்பட்ட போதும் அதற்குரிய அனுமதிப்பத்திரங்களின் கால நீடிப்பு செய்யப்படுவதாகவும் இது தொடர்பில் விஷேட கவனத்தை செலுத்தி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணங்கள் தொடர்பில் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2017 ஜுன் 14 திகதி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் கிடைத்த ரூபா 6,695,000 பெறுமதியான JCB இயந்தரம் 2019 ஆண்டு முதல் செயலிழந்துள்ள போதும் அதனை திருத்துதல் தாமதித்ததால் சபைக்கு பெற வேண்டிய வருமானம் இழந்திருந்ததுடன் செலவு மேற்கொள்ளவும் நேரிட்டிருந்தன. | ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ளும் பிரச்சினை காரணமாக திருத்த வேலைகள் தாமதித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி திருத்தி சபையின் வேலைகளிற்கு பயன்படுத்த வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| ரூபா 3,392,432 செலவில் யடியன்தொட பொது நூலக கட்டிட பரிசோதனையின் போது நிர்மாணிக்கப்பட்ட கட்டிட பின் பகுதியில் அதிக பள்ளத்தாக்குடன் கூடிய வித்தல் ஒன்றிருந்த போதும் நிர்மாணம் அபாயமில்லையென தேசிய கட்டிட ஆராய்சி நிறுவனத்திலிருந்து சான்றிதழ் ஒன்றை பெறாமை, முதலாம் மாடி நிர்மாணித்தல் தொடர்பாக திட்டமொன்று அல்லது மதிப்பீடு இல்லாமை, இரண்டாம் மாடி கூரை அமைக்க தாமதித்தால் மூடப்படாத கம்பிகள் துருப்பிடிக்கும் அபாயம் காணப்பட்டமை, நிர்மாணத்திற்காக மொத்த மதிப்பீடொன்றை தயாரிக்காது நிர்மாணத்தை சமுதாய அடிப்படை சங்கத்தினால் மேற்கொள்ளக் கூடியவாறு இரண்டு மில்லியன் ரூபாய்களிலும் குறைந்த மதிப்பீடு தயாரித்து 03 கட்டங்களின் கீழ் வெவ்வேறாக ஒப்பந்தம் கைச்சாத்திட்டு நிர்மாணப் பணிகள் மேற்கொண்டமை மற்றும் கட்டிடத்தின் ஒரு பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட மதிலிற்கு மதிப்பீடு தயாரிக்கப்படாமை மற்றும் சபை அங்கீகாரத்தை பெறாமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | புதிய கட்டிடத்தின் முன் முகப்பை அமைக்கும் போது கட்டிட ஆராய்சி நிறுவனத்தின் பரிந்துரையை பெற்றுக் கொள்ளவும், சபை ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்க எதிர்பார்க்கும் கட்டிடங்களின் மதிப்பீட்டை தற்போது தயாரித்துள்ளதுடன், மேல் மாடி கூரையை மூடுதல் எதிர்வரும் ஆண்டில் பூர்த்தி செய்ய உத்தேசித்துள்ளதாகவும், நிர்வனத்திலுள்ள ஒதுக்கீடு மற்றும் கொள்ளலவிற்கு ஏற்ப 03 கட்டங்களின் கீழ் இடம்பெற்ற போதும் நிர்மாணத்தின் தரத்தை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மற்றும் காணி எல்லை பிரச்சினைகளிற்கு நீண்ட கால தீர்வாக மதிலை விரைவில் அமைக்க வேண்டி ஏற்பட்டதாகவும், இந்த வேலை பெறுமதியை ஆரம்ப மதிப்பீட்டு பெறுமதியுடன் இணக்கி எதிர்பாரா வேலை அலகின் கீழ் முகாமை செய்து கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணம் மேற்கொள்கையில் திட்டம் தயாரித்தல், குறித்த நிறுவனங்களினூடாக தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் மொத்த கிரய மதிப்பீடு தயாரித்தல் மேற்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபையின் திண்மக்கழிவு முகாமையின் கீழ் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளை தொடர்பாக விவசாயத் திணைக்களத்தால் மேற்கொண்ட பகுப்பாய்வு அறிக்கை பிரகாரம் பரிசோதிக்கப்பட்ட 09 பொருட்களில் 04 இல் இருக்க வேண்டிய பெறுமானங்களை விஞ்சி இருந்தமையால் உற்பத்தி செய்யப்பட்ட இருப்புக்களை நியம தரத்திற்கு கொண்டுவர தேவையான முயற்சிகளை எடுத்திருக்கவில்லை. | சேதனை பசளைகளின் தரத்தை அடைந்து கொள்ள போதிய தொழில் சார்ந்தவர்கள் சபையில் இல்லாததால் சுட்டிக் காட்டிய குறைபாடுகள் காணப்பட்ட போதும் உற்பத்தி செய்யப்பட்ட சேதனை பசளையின் தரத்தை பேணிக் கொள்ள விவசாய அமைச்சுடன் இணைந்த நிகழ்சித் திட்டமொன்றை 2021 ஆண்டில் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சேதனை பசளையை உரிய நியமத்துடன் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |